2025 அக்டோபர் மாதம் 14 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 12/2020

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 – ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW11 – சதீஷ்குமார் (LW3) |
| தகப்பனார் பெயர்: | கருப்பையா |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | டீ கடை வியாபாரம் |
| வயது : | 37 |

14.10.2025

(1, 2 எதிரிகள் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தேனி அல்லிநகரம், ஓடைத் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் டீ கடை வியாபாரம் செய்து வருகிறேன். வழக்கு ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 04.03.2019ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் தேனியிலிருந்து உசிலம்பட்டி அருகிலுள்ள எங்களது கோவிலுக்காக தேனியிலிருந்து இரண்டு ஆட்டோக்களில் புறப்பட்டோம். ராமு என்பவர் ஓட்டிய ஆட்டோவில் சென்றாயன், சென்றாயன் மனைவி சுதாலட்சுமி, சுதாலட்சுமி அம்மா பொன்னுத்தாய், சென்றாயன் மகள் அபிநயா, மகன் லோகமணி ஆகியோர்கள் சென்றோம். அதன்பின் பின்னால் சென்ற சர்தார் என்பவர் ஓட்டிய ஆட்டோவில் முருகன், நான், முருகன் மகன் சுரேஷ், மருமகள்

பாண்டியம்மாள், நாகராஜ் ஆகியோர்கள் சென்றோம். இரண்டாவது ஆட்டோவில் பின்தொடர்ந்து சென்றோம். பிராதுக்காரன்பட்டி விலக்கு எதிரில் உள்ள டீ கடையில் டீ சாப்பிட்டோம். அதன்பின்னர் ராமு ஓட்டிய ஆட்டோ முன்னால் செல்ல, சர்தார் ஓட்டிய ஆட்டோவில் நாங்கள் சென்றோம். ஆண்டிபட்டி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் ராமு சென்ற ஆட்டோ மேற்கிலிருந்து கிழக்காகவும், கருப்பசாமி என்பவர் அரசு பேருந்தை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓட்டி வந்தார், இரண்டு பேருமே அவர்களது வாகனத்தை வலது புறமாக ஏறி வந்தார்கள். விபத்து ஏற்படும், அதனால் பாதிப்பு ஏற்படும் என்பது தெரிந்தே இரண்டு நபர்களும் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் ஓட்டி வந்தார்கள். ஆட்டோவும், அரசு பேருந்தும் எதிர் எதிராக மோதிக்கொண்டது. ஆட்டோ இடதுப்புறமாக தலைக்குப்புற கிடந்தது. விபத்து ஏற்பட்டதில் பொன்னுத்தாய்க்கு காயம் ஏற்பட்டது. சென்றாயன், சுதாலட்சுமி, அபிநயா மற்றும் லோகமணி ஆகியோர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். பொன்னுத்தாயிற்கும் ஆட்டோ ஓட்டுநர் ராமுக்குவிற்கும் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலமாக அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். பின்னர் இறந்துபோன 4 நபர்களையும் க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பினார்கள். பின்னர், ஆண்டிபட்டி காவல்நிலையத்திற்கு சென்றாயன் மகன் முருகன், நான் மற்றும் நாகராஜ் ஆகியோர்கள் சென்றோம். முருகன் என்பவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். நாகராஜ் என்பவர் சாட்சி கையொப்பம் செய்தார். நானும் உடன் சென்றேன். புகார் கொடுத்துவிட்டு க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையில் சிகிச்சைக்கு பின்பு பொன்னுத்தாய் என்பவர் இறந்துவிட்டார். ஆட்டோ ஓட்டுநர் ராமு சிறிய காயத்துடன் சிகிச்சை பெற்றார். இது விசயமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். காலை 9.00 மணிக்கு டீ கடைக்குப்

போவேன். சம்பவத்தில் இறந்துபோன சென்றாயன் எனது உடன்பிறந்த சகோதரர் ஆவார். போலீசார் என்னை 04.03.2019ம் தேதி காவல் நிலையத்திலும், மருத்துவமனையிலும் வைத்து என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் காயம்பட்ட நபர்களுக்கு எங்கெங்கு காயம் ஏற்பட்டது என்பதை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்தெந்த மாதிரியான வாகனத்திற்கு எந்த பகுதிகளில் சேதம் ஏற்பட்டது என்பதை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சர்தார் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு எண்ணோ, அல்லது அது என்ன கம்பெனியின் வாகனம் என்றோ குறிப்பிட்டு போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சர்தார் ஆட்டோவில் நான் செல்லவில்லை என்றும், அதனால்தான் இறந்துபோன நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்தோ, வண்டியின் சேதம் குறித்தோ, மேலும் நாங்கள் சென்ற ஆட்டோவின் பதிவு எண் குறித்தோ என்னால் சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல, சம்பவத்தன்று எங்கள் மனநிலை அவ்வாறு இருந்ததால் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை. நான் அடிக்கடி தேனியிலிருந்து மதுரைக்கு செல்லும் வழக்கம் உண்டு என்றால் சரிதான். அதனால் ரோடுகளின் அமைப்பு முழுவதும் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய ஆண்டிபட்டி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே உள்ள ரோடு S வடிவில் வளைந்து செல்லக்கூடிய ரோடு என்றால் சரிதான். பள்ளியின் எதிர்புறம் தான் ரோடு அமைந்துள்ளது என்றால் சரிதான். சம்பவ நேரம் காலை நேரம் என்பதால் ரோட்டில் வாக்கிங் செல்பவர்கள் அதிகமான பேர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நாள் மகாசிவராத்திரி என்றால் சரிதான். மகாசிவராத்திரி என்பதால் கூடலூரிலிருந்து உசிலம்பட்டியில் உள்ள குலதெய்வ கோவிலுக்கு அதிகமான நபர்கள் கோவிலுக்கு செல்வார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று மகாசிவராத்திரி என்பதால் அதிகமான வாகனப்போக்குவரத்து

இருந்ததாலும், S வடிவிலான ரோடு இருந்ததாலும், 1வது எதிரி வாகனத்தை மெதுவாகத்தான் முறையாக சாலைவிதிகளை கடைபிடித்து ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. ஆண்டிபட்டி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மேற்குப்புறம் பேரிக்காடு போடப்பட்டிருந்தது என்றால் இருப்புறமும் பேரிக்காடு போடப்பட்டிருந்தது. ஆண்டிபட்டி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி தாண்டி கொண்டமநாயக்கன்பட்டி விலக்கில் இரண்டு புறமும் வாகனச் சோதனைக்காக பேரிக்காடு போடப்பட்டுள்ளன என்றால் சரிதான். பள்ளிக்கும், கொண்டமநாயக்கன்பட்டி விலக்கிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 450 மீட்டர் தூரம் இருக்கும். இறந்துபோனவர் எனது அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், சம்பவத்தன்று நான் ஆட்டோவில் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சர்தார் ஆட்டோவில் சதீஷ் (நான்), நாகராஜ், சுரேஷ், பாண்டியம்மாள், சுரேஷின் மகள் ஆகியோர் சென்றோம். மேற்படி ஆட்டோவில் மேற்கூறிய 4 நபர்களும் ஏறி முடித்தப்பிறகு கடைசியாக அந்த ஆட்டோவில் நான் ஏறினேன். ஏற்கனவே நான்கு நபர்கள் ஏறிய ஆட்டோவில் நான் சட்டவிரோதமாக ஏறினேன் என்றும், அவ்வாறு ஏறக்கூடாது என்று சொன்னால் கோவிலுக்கு சென்றதால் நான் அவ்வாறு ஏறினேன். மேற்சொன்ன நான்கு நபர்களுடன் முருகன் என்பவரும் நான் பயணித்த ஆட்டோவில் முன்பே ஏறியிருந்தார் என்று சொன்னால் சரிதான். ராமு ஓட்டிச்சென்ற ஆட்டோவை நேருக்கு நேராக மோதும்போது முதலில் பாதிக்கப்படும் நபர் ஓட்டுநர் ராமு என்று சொன்னால் வண்டியை விட்டு தாவி விட்டால் அவர் பாதிக்கப்படப்போவதில்லை. ஆட்டோவை ஓட்டிச்சென்ற ராமு சம்பவ சமயத்தில் ஆட்டோவிலிருந்து தாவி விட்டாரா என்றால் சரிதான். அவ்வாறு தாவியதால் ராமு எந்தவித காயங்களும்

ஏற்படாமல் தப்பித்துவிட்டாரா என்றால் கை மற்றும் நெற்றி ஆகிய பகுதிகளில் அவருக்கு காயங்கள் இருந்தன. ராமுவிற்கு ஏற்பட்ட காயங்கள் வாகனத்தின் மீது மோதியதால் ஏற்பட்ட காயமா அல்லது அவர் வாகனத்திலிருந்து தாவியதால் ஏற்பட்ட காயமா என்று சொன்னால் வாகனத்திலிருந்து தாவியதால் அந்த காயம் ஏற்பட்டது. ஆட்டோ ஓட்டுநர் ராமு ஆட்டோவிலிருந்து தாவி விட்டார் என போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ராமு ஓட்டிச்சென்ற ஆட்டோவிற்கும் நான் சென்ற சர்தார் ஆட்டோவிற்கும் இடையே பிராதுக்காரன்பட்டியிலிருந்து எவ்வளவு தூரம் விபத்து நடக்கும்வரை இருந்தது என்று சொன்னால் 15 அடி இடைவெளியில் இரண்டு வாகனமும் சென்றது. நான் அமர்ந்து சென்ற வாகனம் சீராக சென்றது என்றால் இல்லை கொஞ்சம் வேகமாக தான் சென்றது. நான் சென்ற வாகனத்திற்கும் எனக்கு முன்னால் சென்ற வாகனத்திற்கும் இடையே சீரான இடைவெளி இருந்தது என்பதால் எனக்கு முன்னால் சென்ற வாகனமும் சீரான வேகத்தில் தான் சென்றது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் ராமு அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிச்செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்து சத்தம் கேட்டப்பிறகு தான் விபத்தை பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. புகாரை காவல்நிலையத்தில் யார் எழுதினார் என்றால் காவல்நிலைய எழுத்தர் முருகன் சொல்ல சொல்ல எழுதினார். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், ஆட்டோவில் பயணிக்கவில்லை என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 14.10.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.14 19:22:37 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
14.10.2025

2025 அக்டோபர் மாதம் 14 – ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 12 /2020

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 – ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.C.லதா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW12 – ஆயிரம்பாண்டி |
| தகப்பனார் பெயர்: | மாரிமுத்து |
| ஊர்: | அல்லிநகரம் |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | ஆட்டோ ஓட்டுநர் |
| வயது : | 54 |

14.10.2025

(1, 2 எதிரிகள் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி அல்லிநகரம் வெங்கலக்கோவில் அருகே குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக இருந்து வருகிறேன். கடந்த 04.03.2019 ம் தேதி முருகன் தன்னுடைய குலதெய்வ கோவிலுக்கு இரண்டு ஆட்டோக்களில் சென்றதாகவும், ஆண்டிபட்டி, கொண்டமநாயக்கன்பட்டி, ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே சென்றபோது, ஆட்டோவும், அரசு பேருந்தும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில், விபத்து நடந்ததாக கேள்விப்பட்டு க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு விசாரித்தப்போது, சுதாலட்சுமி, சென்றாயன், அபிநயா, லோகமணி ஆகியோர்கள் இறந்துவிட்டதாகவும், பொன்னுத்தாய் மற்றும் ஆட்டோ ஓட்டுநர் ராமு

ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டதாகவும், பொன்னுத்தாய் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், ராமு என்பவருக்கு சிறிது காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்ததை பார்த்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் சம்பவம் குறித்து கேள்விப்படும்போது அல்லிநகரத்தில் இருந்தேன். எனது மச்சினன் செல்வேந்திரன் போன் மூலமாக எனக்கு தகவல் சொன்னார். எனது மைத்துனருக்கு வேறு ஒருவர் போன் மூலம் தகவல் சொல்லியுள்ளார். எனக்கு மதியம் 3 மணிக்கு தகவல் வந்தது. நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும், போலீசாருக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 14.10.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.14 19:22:46 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
14.10.2025

<u>2025  அக்டோபர்  மாதம் 14 – ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர்  :  12/2020</u>

2025–ஆம் ஆண்டு அக்டோபர்  மாதம் 14 – ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.C.லதா,  கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW13 – மகுடீஸ்வரன் |
| தகப்பனார் பெயர்: | பகவதி |
| ஊர்: | பழனி |
| வட்டம்: | பழனி |
| மாவட்டம்: | திண்டுக்கல் |
| தொழில்: | ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் |
| வயது : | 63 |

14.10.2025

(1, 2 எதிரிகள் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு  சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்சமயம் காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 04.03.2019ம் தேதி காலை 8.30 மணியளவில் ஆண்டிபட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது, தேனி அல்லிநகரம், கம்போஸ்ட் ஓடைத்தெருவை சேர்ந்த பொன்னையாத்தேவர் மகன் முருகன் நிலையத்தில் ஆஜராகிக்கொடுத்த புகார் மனுவைப் பெற்று, வழக்கின் தன்மைக்கேற்ப ஆண்டிபட்டி காவல்நிலைய குற்ற எண்.109/2019 பிரிவுகள் 279, 237, 304 (ஏ) மற்றும் 304 (2) இ.த.ச.ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான்  பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.10–**ஆக

குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் கோப்புகளை ஆண்டிபட்டி காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் மேல்விசாரணைக்காக ஒப்படைத்தேன். முதல் தகவல் அறிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

**1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 04.03.2019 ம் தேதி காலை 7.20 மணி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடம் ஆண்டிபட்டி டூ மதுரை ரோட்டில் கொண்டமநாயக்கன்பட்டி, ஆண்கள் பள்ளி அருகில் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த இடம் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரிலோ சர்தார் ஆட்டோவில் என்னுடைய மகன் சுரேஷ், மருமகள் பாண்டியம்மாள், பேத்தி திவ்யா ஆகியோர்கள் ஒரே ஆட்டோவில் சென்றோம் என்றுள்ளது என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரிலோ பிராதுக்காரன்பட்டியில் நிறுத்தி டீ சாப்பிட்டதாக சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை மற்றும் புகாரிலோ சர்தார் ஆட்டோவின் பதிவு எண் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் இடையே 500 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். புகாரை காவல்நிலையத்தில் வைத்து கொடுக்கப்பட்டதா அல்லது நான் மருத்துவமனைக்கு சென்று புகார் பெறப்பட்டதா என்றால் காவல்நிலையத்திற்கு ஆஜராகி புகார் கொடுக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்வரை காவல்நிலையத்திற்கு விபத்து குறித்து தகவல் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். அ.சா.1 முருகன் மட்டும் கையொப்பம் செய்து கொடுத்த புகாரை இவ்வழக்கில் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் எழுதிக்கொடுத்த புகார் ஆகும். அந்த புகாரை

யார் எழுதினார்கள் என்று நான் விசாரிக்கவில்லை. புகாரில் யார் யாருக்கு என்னென்ன காயங்கள் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோன்று வாகனங்களுக்கு எந்த பகுதியில் சேதம் ஏற்பட்டது என்றும் புகாரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக வழக்குப் பதிவு செய்தவுடன் எனக்கு உடனடி மேலதிகாரியான காவல் ஆய்வாளரிடம் தான் கோப்புகளை ஒப்படைப்பேன் என்றால் சரிதான். இவ்வழக்கிலும் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான், மேலும் நீதிமன்றத்திற்கும், காவல் துணைக்கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைத்தேன். காவல்நிலையத்திற்கும், ஆண்டிபட்டி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ஒரு கி.மீ தூரம் இருக்கும். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை ஆண்டிபட்டி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் 04.03.2019 ம் தேதி இரவு 9.30 மணியளவில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆண்டிபட்டி காவல்நிலையத்தில் 4 மாதங்கள் பணிபுரிந்தேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. ஆண்பட்டி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி முன்புள்ள ரோடு S வடிவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தேனி டூ மதுரை ரோடு ஆண்டிபட்டி பள்ளி அருகே S வடிவில் இருப்பதால் பள்ளிக்கு இருபுறமும் பேரிகாடு போடப்பட்டுள்ளன என்றால் சரிதான். அன்றைய தினம் மகாசிவராத்திரி என்பதால் வாகனங்கள் அதிகமாக வருவதால் காவல்நிலையத்திலிருந்து சோதனை சாவடி போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். மகாசிவராத்திரி என்பதால் அன்றைய தினம் அதிகமான வாகன போக்குவரத்து இருந்தது என்றால் சரிதான். ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு எதிர்புறம் தான் மைதானம் உள்ளது என்றால் சரிதான். அந்த மைதானத்தில் வாக்கிங் செல்பவர்கள் ரோட்டின் அருகே வாகனத்தை நிறுத்திவிட்டு செல்வார்கள் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தை பார்க்காமல் மேலதிகாரிகளின் உத்தரவிற்கிணங்க

எதிரிகளுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகாரை பெற்ற நான் எந்தவித அடிப்படை ஆதாரம் இல்லாமல் இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 304(2)—ன்கீழ் வழக்கு பதிவு செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :— இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 14.10.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.10.14 19:23:00 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி (FAC), தேனி.
14.10.2025